Ours bank with
Bank of Baroda

மதுரை மணி

தினசரி தமிழ் நாளிதழ்

Madurai Mani Tamil Evening Daily

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)

2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road, Madurai-625 001.

மதுரை பதிப்பு	*மணி 55	* ஓசை 327	உள்ளூர் - 27.11.2026	வெள்ளிக்கிழமை	விலை ரூ.4/-	பக்கங்கள்-4	Website : http://maduraimaninews.com
Madurai Edition	*Vol 55	* Issue 327	வெளியூர் - 28.11.2026	சனிக்கிழமை	Price Rs. 4/-	Pages -4	Email: maduraimaninews@gmail.com

12 ராசிகளுக்கான வழிபாடு/ பொதுப் பரிகாரங்கள்!

பி வரச்சிஎல். 415 பணியிடங்கள்!

அம்பாசமுத்திரம், பெருந்துறையில் இடைத்தேர்தல் !

கூட்டுறவு சங்கங்கள் மூலம் டாஸ்மாக்!

ஜனாதிபதி திரவுபதி முர்மு கேரளா வருகை!

பெரும்பாவூர், நவ. 27–

ஜனாதிபதி திரவுபதி முர்மு 2 நாட்கள் சுற்று பயணமாக இன்று (வெள்ளிக்கிழமை) கேரளாவிற்கு வருகிறார். இன்று காலை கொச்சிக்கு தனி விமானம் மூலம் வரும் ஜனாதிபதி ஆதிசங்கராச்சாரி யார் ஜென்ம பூமி ஆலயத்திற்கு சென்று தரிசனம் செய்கிறார். மாலை 3 மணியளவில் குருவாயூர் கோவிலுக்கு சென்று சாமி தரிசனம் செய்ய உள்ளார்.



இதனால் 3.30 மணி முதல் 4 மணி வரை குருவாயூரில் பக்தர்களுக்கான தரிசனம் தெற்கு நடையில் நிறுத்தி வைக்கப்படும் என்று தெரிகிறது. நாளை (சனிக் கிழமை) காலை கண்ணூரில் நடைபெறும் எழில் மலை கப்பல் படை தளத்தில் நடைபெறும் அதிகாரிகள் பாலிங் அவுட் நிகழ்ச்சியில் முக்கிய விருந்தினராக அவர் பங்கேற்கிறார். அதன்பின்னர் டெல்லி திரும்புகிறார். ஜனாதிபதி வருகையையொட்டி கேரளத்தில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

நவ. 30-ல் மகளிர் இடஒதுக்கீடு மசோதா?

புதுடெல்லி, நவ. 27–

நவம்பர் 30–ம் தேதி லோக்சபா சிறப்பு அமர்வு நடைபெறும் என மத்திய அமைச்சர் கிரண் ரிஜிஜு தெரிவித்துள்ளார். தொகுதி மறுவரையறையுடன் இணைக்கப்பட்ட மகளிர் இடஒதுக்கீடு மசோதாவை நிறைவேற்ற மத்திய அரசு முயற்சி செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. மசோதா நிறைவேற 540 உறுப்பினர்களில் 361 பேரின் ஆதரவு தேவை. இதுகுறித்து பிரதமர் மோடி அமைச்சர்களுடன் ஆலோசனை நடத்துகிறார். மறுபுறம், சிறப்பு அமர்வில் எதிர்க்கட்சிகளின் வியூகம் குறித்து சோனியா காந்தி காங்கிரஸ் எம்.பி.,க்களுடன் ஆலோசிக்க உள்ளார்.



பயிர் சாகுபடி பாதிப்பு: முதல்வர் விஜய் ஆலோசனை! நிவாரணம் வழங்கப்படுமா?

சென்னை, நவ. 27–

டெல்டா விவசாயிகள் பிரச்சனை தொடர்பாக அமைச்சர்கள், அதிகாரிகளுடன் முதல்வர் விஜய் ஆலோசனை மேற்கொண்டு வருகிறார்.

தமிழகத்தில் மழை இல்லாததால் பயிர்கள் சாகுபடி கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக டெல்டா மாவட்டங்களில் மழைநீர் பொய்த்துப் போனதால் பயிர்கள் அதிகமாக சேதம் ஏற்பட்டுள்ளது. இதனால் பாதிக்கப்பட்ட பகுதிகளை



வறட்சிப் பகுதிகளாக அறிவித்து நிவாரணம் வழங்க வேண்டும் என்று கோரிக்கை எழுந்துள்ளது.

இதையடுத்து பயிர் சாகுபடி நிலவரம் மற்றும் பயிர்க் காப்பீடு, கால்நடைத் தீவனம் உள்ளிட்டவை குறித்து சென்னை தலைமைச் செயலகத்தில் முதல்வர் விஜய் ஆலோசனை மேற்கொண்டு வருகிறார். இந்த கூட்டத்தில் நீர்வளம், நிதி, கூட்டுறவு, பொதுப்பணித் துறை, கால்நடைத் துறை, வேளாண் துறை அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் கலந்துகொண்டுள்ளனர். டெல்டா விவசாயிகளுக்கு வறட்சி நிதி வழங்குவது குறித்து ஆலோசனை மேற்கொள்வதாகக் கூறப்படுகிறது.

அரசு ஊழியர்களுக்கு 15 நாள் "தந்தையர் விடுப்பு"

சென்னை, நவ. 27–

தமிழக அரசு ஆண் பணியாளர்களுக்கு, முதல் முறையாக 15 நாட்கள் தந்தையர் மகப்பேறு கால விடுப்பு வழங்கப்படுவதாக முதல்வர் விஜய் அறிவித்துள்ளார். தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

தமிழக அரசில் பணிபுரியும் பெண் பணியாளர்களுக்கு 365 நாட்கள் மகப்பேறு விடுப்பு வழங்கப்பட்டு வருகிறது. இதேபோல், அரசு ஆண் பணியாளர்களுக்கும் தந்தையர் மகப்பேறு கால விடுப்பு வழங்குவது குறித்து பரிசீலிக்க வேண்டும் என்ற கோரிக்கை அரசுப் பணியாளர்களிடமிருந்து அரசுக்கு வந்துள்ளது.

குழந்தை பிறக்கும் காலகட்டம் தாய் மற்றும் குழந்தைக்கு மிகவும் முக்கியமானது. அந்த நேரத்தில் தாய்க்கு உடல் மற்றும் மனரீதியான ஆதரவு அளிப்பதுடன், குழந்தை



பராமரிப்பிலும் தந்தையின் பங்களிப்பு அவசியமாகிறது.

பெண் அரசுப் பணியாளர்களுக்கு 365 நாட்கள் மகப்பேறு விடுப்பு வழங்கப்படுவது, தாய்மை மற்றும் குழந்தை நலனுக்கு அளிக்கப்படும் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துகிறது. அதேபோன்று, ஆண் அரசுப் பணியாளர்களுக்கும் தந்தையர் மகப்பேறு கால விடுப்பு வழங்குவது, குடும்பப் பொறுப்புகளைப் பகிர்ந்துகொள்ளவும் குழந்தை வளர்ப்பில் தந்தையின் பங்களிப்பை உறுதிப்படுத்தவும் உதவும்.

எனவே, இந்தக் கோரிக்கையைத் தமிழக அரசு கனிவுடன் பரிசீலித்து, திருமணமான ஆண் அரசுப் பணியாளர்கள் தங்கள் மனைவியின் மகப்பேறு காலத்தில் உடனிருக்க 15 நாட்கள் விடுப்பு வழங்க உத்தரவிட்டுள்ளது. இந்த விடுப்பைக் குழந்தை பிறப்பதற்கு 15 நாட்களுக்கு முன்பிருந்தோ அல்லது குழந்தை பிறந்த நாளிலிருந்து ஆறு மாதங்களுக்குள்ளாகவோ எடுத்துக்கொள்ளலாம். இவ்வாறு அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசு ஊழியர்கள் வரவேற்பு

ஆண் அரசு ஊழியர்களுக்கான தந்தையர் மகப்பேறு விடுப்பு அறிவிப்புக்கு தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியம், கிராம நிர்வாக அலுவலர்கள் சங்கம் உள்ளிட்ட பல்வேறு அரசு ஊழியர் மற்றும் ஆசிரியர் சங்கங்கள் வரவேற்பு தெரிவித்துள்ளன.

பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் திரிபுராவில் உள்ளாட்சித் தேர்தல் வாக்குப்பதிவு தொடக்கம்!

அகர்தலா, நவ. 27–

திரிபுராவில் அகர்தலா மாநகராட்சி உள்பட 16 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான வாக்குப்பதிவு, பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு மத்தியில் வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு தொடங்கி நடைபெற்று வருகிறது. வாக்காளர்கள் வரிசையில் நின்று தங்களது வாக்கை பதிவு செய்து வருகின்றனர் என்று அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த 16 உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள 268 இடங்களுக்கு அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைகள் என மொத்தம் 733 போட்டியிடுகின்றனர்.

இவர்களது அரசியல் விதியை, மொத்தம் 5.56 லட்சம் வாக்காளர்கள் தீர்மானிக்க உள்ளனர்.

அகர்தலா மாநகராட்சியில் 51 வார்டுகள் உள்ளன.

மாநிலம் முழுவதும் உள்ள அனைத்து வாக்குச் சாவடிகளிலும் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் காலை 7 மணிக்கு வாக்குப்பதிவு தொடங்கி



அமைதியாக நடைபெற்று வருவதாகவும், மாலை 4 மணி வரை வாக்குப்பதிவு நடைபெறும் என்று மாநில தேர்தல் ஆணையத்தின் செயலாளர் அனுராக் சென் தெரிவித்தார்.

தேர்தல் பணியில் சுமார் 4,600 அரசு ஊழியர்களும், சுதந்திரமான மற்றும் நேர்மையான வாக்குப்பதிவை உறுதி செய்வதற்காக, மத்திய ஆயுதக் காவல் படையின் 39 படைப்பிரிவுகள் உள்பட 10,000–க்கும் மேற்பட்ட பாதுகாப்புப் பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று தெரிவித்தார்.

அரசியல் கட்சிகளைப் பொறுத்தவரை, பாஜக அதிகபட்சமாக 266 வேட்பாளர்களைக் களமிறக்கியுள்ளது. அதற்கு அடுத்தபடியாக சிபிஐ(எம்) 228 வேட்பாளர்களையும், காங்கிரஸ் 201 வேட்பாளர்களையும் நிறுத்தியுள்ளன. இதன் மூலம், இந்த உள்ளாட்சி அமைப்புகளில் இந்தகட்சிகளுக்கிடையே மும்முனைப் போட்டி நிலவுகிறது.

திருப்பரங்குன்றம் தீபத்தூண் விவகாரம்:

உச்சநீதிமன்றத்தில் அவமதிப்பு மனுக்கள் விசாரணை!

தீபம் ஏற்றாதது குறித்து மட்டுமே விசாரணை!

ஏ.எஸ்.ஐ., குழுவை போலீஸ் தடுத்ததாக குற்றச்சாட்டு!!

மதுரை, நவம்பர் 27–

திருப்பரங்குன்றம் மலைத் தீபத்தூணில் கார்த்திகை தீபம் ஏற்றப்படாதது தொடர்பான அவமதிப்பு மனுக்கள் மற்றும் கோரிக்கை மனுக்களை உச்சநீதிமன்றம் இன்று விசாரித்தது. நவம்பர் 20–ம் தேதி பிறப்பித்த உத்தரவின்படி, நவம்பர் 24–ம் தேதி ஒருமுறை தீபத்தூணில் தீபம் ஏற்ற அனுமதி அளிக்கப்பட்டிருந்தது. அந்த உத்தரவு அமல்படுத்தப்படாததற்காக தமிழக அரசு உச்சநீதிமன்றத்தில் மன்னிப்புக் கோரியதைத் தொடர்ந்து இந்த விசாரணை நடைபெற்றது.



உச்சிப்பிள்ளையார் கோயில் அருகேயுள்ள வழக்கமான தீப மண்டபத்தில் தீபம் ஏற்றப்பட்ட நிலையில், தீபத்தூணில் ஏற்றப்படாதது சர்ச்சையை ஏற்படுத்தியது. தீபத்தூண், மலையில் உள்ள தர்காவிலிருந்து சுமார் 50 மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. அங்கு தீபம் ஏற்ற அனுமதி கோரி இந்து அமைப்புகள் மனு அளித்திருந்தன. இந்த விவகாரத்தில் தாமாக முன்வந்து நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கை எடுக்க உச்சநீதிமன்றம் மறுத்திருந்தாலும், மனு தாக்கல் செய்யப்பட்டால் விசாரிப்பதாகத் தெரிவித்திருந்தது.

மலையின் கீழ்ப்பகுதியில் உள்ள உச்சிப்பிள்ளையார் கோயில் அருகேயுள்ள தீப மண்டபத்தில் கார்த்திகை தீபம் ஏற்றுவது நீண்டகால வழக்கமாக இருந்து வருகிறது. அந்த வழக்கத்தை தீபத்தூண் வரை நீட்டிக்க வேண்டும் என இந்து அமைப்புகள் கோரின. மலை உச்சி முழுவதும் தங்களுக்குச் சொந்தமானது என தர்கா தரப்பினர் உச்சநீதிமன்றத்தில் தெரிவித்திருந்தனர். இறுதியில், வழக்கமான இடத்திலேயே தீபம் ஏற்றப்பட்டது. நிலைநிறுத்தப்பட்ட மத நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும் என கோயில் அறங்காவலர் குழு தெரிவித்திருந்தது.

விசாரணையில் முன்வைக்கப்பட்ட வாதங்கள்

காலை 11.02 மணி: தீபம் ஏற்றுவதைத் தடுத்தது கோடிக்கணக்கான மக்களின் உணர்வுகளைப் பாதித்துள்ளதாக மத்திய அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் கூறினார். பாஜக சார்பில் வியாழக்கிழமை நடைபெற்ற அரசியலமைப்பு தின நிகழ்ச்சியில் பேசிய அவர், மரபான தீபம் ஏற்றும் வழக்கைத் தடுப்பது நாட்டின் பண்பாட்டு மரபு மற்றும் கோயில் பாரம்பரியத்தை அழிக்கும் முயற்சி என்றும் விமர்சித்தார். இத்தகைய கட்டுப்பாடுகள் தொடர்ந்தால், நாளை கோயில்களுக்குச் செல்லவும் தடை விதிக்கப்படுமா என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

காலை 12.07 மணி: இந்த வழக்கில், தீபத்தூணில் தீபம் ஏற்றப்படாதது தொடர்பான நீதிமன்ற அவமதிப்பு விவகாரத்தைமட்டுமே விசாரிப்பதாகவும், முதன்மை வழக்கை விசாரிக்கவில்லை என்றும் உச்சநீதிமன்றம் தெளிவுபடுத்தியது. மாவட்ட ஆட்சியர் அளித்த உறுதிமொழியும் அதிகாரிகளுக்கு விதிக்கப்பட்ட பொறுப்புகளும் மீறப்பட்டதாக மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் குரு கிருஷ்ணகுமார் வாதிட்டார்.

காலை 12.14 மணி: மாவட்ட ஆட்சியரின் அறிக்கை, பொறுப்பை மற்றவர்களிடம் தள்ளிவிடும் வகையில் இருப்பதாகவும், அறங்காவலர் குழு அரசியல் நியமனங்களால் அமைக்கப்பட்டது என்றும் மனுதாரர் தரப்பு குற்றம்சாட்டியது. தீப மண்டபத்தில் தீபம் ஏற்ற அறங்காவலர் குழுவே விரும்பியதாக ஆட்சியரின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாகவும் வாதிடப்பட்டது.

காலை 12.19 மணி: அறங்காவலர் குழு எப்போது தீர்மானம் நிறைவேற்றியது என்பதற்கான பதிவு இல்லை எனக் கூறிய மனுதாரர் தரப்பு, உச்சநீதிமன்ற உத்தரவைப் பின்பற்ற வேண்டாம் என அரசு ஏற்கெனவே முடிவு செய்திருந்ததாகக் குற்றம்சாட்டியது. நிர்வாகத் தொடர் சங்கிலியில் பலவீனமான இணைப்பாக அறங்காவலர் குழுவை அரசு பயன்படுத்தியதாகவும் வாதிடப்பட்டது.

காலை 12.22 மணி: தீப மண்டபத்தில் தீபம் ஏற்றுவது தொடர்பான அறங்காவலர் குழுவின் முடிவுக்கு ஸ்தானிகர்கள் ஆதரவு அளிக்கவில்லை என்று அவர்கள் தெரிவித்துள்ளதாக மனுதாரர் தரப்பு கூறியது. செயல் அலுவலர் அந்தத் தீர்மானத்தில் கையெழுத்திட்டதாகவும் குறிப்பிடப்பட்டது.

காலை 12.24 மணி: கோயில் அறங்காவலர் குழுவைத் தொடர்ந்து செயல்பட அனுமதிக்கக் கூடாது என்றும், தீபத்தை தீப மண்டபத்திலிருந்து தீபத்தூணுக்கு மாற்ற வேண்டும் என்றும் மனுதாரர் தரப்பு கோரியது. கோயிலை இந்தியத் தொல்லியல் ஆய்வுத் துறையிடம் (ஏ.எஸ்.ஐ.,) ஒப்படைக்கவும் கோரிக்கை வைக்கப்பட்டது.

காலை 12.28 மணி: இது சிவில் மற்றும் கிரிமினல் நீதிமன்ற அவமதிப்பாக அமையும் என மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் தெரிவித்தார். நீதியின் செயல்பாட்டில் தலையிடுவது கிரிமினல் அவமதிப்பாகும் என்றும், அமைச்சர்களும் பொறுப்பேற்க வேண்டியிருக்கும் என்றும் அவர் வாதிட்டார்.

காலை 12.35 மணி: ஏ.எஸ்.ஐ., சார்பில் ஆஜரான சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா, தீபத்தூணில் தீபம் ஏற்ற ஒரு தரப்பினர் விரும்பியதும், மற்றொரு தரப்பினர் எதிர்த்ததும் மறுக்க முடியாத உண்மை என்றார். நவம்பர் 24–ம் தேதி குறிப்பிட்ட முறையில் தீபம் ஏற்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாகவும், மாநில நிர்வாகம் உள்ளிட்டவர்களுக்கு பொறுப்புகள் ஒதுக்கப்பட்டதாகவும் அவர் கூறினார். ஏ.எஸ்.ஐ., குழுவினர் தர்கா நுழைவாயிலில் தடுத்து நிறுத்தப்பட்டதாகவும், மாவட்ட ஆட்சியரின் நடவடிக்கைகள் கண்துடைப்பாக இருந்ததாக ஏ.எஸ்.ஐ., அறிக்கைகள் தெரிவிப்பதாகவும் குற்றம்சாட்டினார்.

காலை 12.37 மணி: காவல்துறையினர் ஏ.எஸ்.ஐ., குழுவைத் தடுத்து, தீபத்தூணை ஆய்வு செய்ய விடாமல் மலையிலிருந்து இறங்கச் செய்ததாக சொலிசிட்டர் ஜெனரல் தெரிவித்தார். "காவல்துறையின் கட்டுப்பாட்டில் நிலைமை இருந்தது; ஏ.எஸ்.ஐ., குழுவினர் காத்திருந்தனர். பின்னர் தூணை ஆய்வு செய்யாமலேயே அவர்கள் மலையிலிருந்து இறங்கினர்" என்று அவர் கூறினார். இது தீவிரமான நீதிமன்ற அவமதிப்பு மற்றும் நிர்வாக ஆணவம் என்றும் அவர் குற்றம்சாட்டினார்.



தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தலைவர் ஜே.சி.டி. பிரபாகர் தலைமையில் தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்நாடு முதலமைச்சர் ச. ஜோசப் விஜய், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான வி.வி. சுவாமிநாதன் நூற்றாண்டு பிறந்தநாளை முன்னிட்டு அவருக்கு மாலை மற்றும் பொன்னாடை அணிவித்து, நினைவுப் பரிசு வழங்கிச் சிறப்பித்து, அவர்களின் குடும்பத்தினருடன் குழுப் புகைப்படம் எடுத்துக் கொண்டார்.

தலையங்கம்
மதுரை மணி
வெள்ளிக்கிழமை 27.11.2026
பராபவ தமிழ் வருடம்
கார்த்திகை மாதம் 11-ம் தேதி

பெண்கள் மற்றும் குழந்தைகள் நலன்: மேம்பாட்டை உறுதி செய்வோம்!



பெண்கள் மற்றும் குழந்தைகளின் நலன், ஒரு சமூகத்தின் முன்னேற்றத்தை அளவிடும் முக்கியக் குறியீடாகும். அவர்களின் பாதுகாப்பு, உடல்நலம், கல்வி, கண்ணியம் ஆகியவை குடும்பம், சமூகம் மற்றும் அரசின் பகிரப்பட்ட பொறுப்பாக இருக்க வேண்டும்.

பெண்களுக்குக் கல்வி, வேலைவாய்ப்பு, மருத்துவ வசதி மற்றும் தலைமைப் பொறுப்புகளில் சம வாய்ப்பு கிடைக்க வேண்டும். வீடு, பணியிடம், பொது இடம் என எல்லா இடங்களிலும் அவர்களுக்குப் பாதுகாப்பு உறுதி செய்யப்பட வேண்டும். உரிமைகளைப் பாதுகாக்கச் சட்டங்கள் இருந்தாலும், அவற்றைப் பற்றிய விழிப்புணர்வும் உரிய நேரத்தில் நடவடிக்கை எடுப்பதும் அவசியம். பெண்கள் தங்கள் வாழ்க்கை குறித்த முடிவுகளைத் தாங்களே எடுக்கவும், தங்கள் இலக்குகளை அடையவும் குடும்பமும் நிறுவனங்களும் ஆதரவளிக்க வேண்டும்.

குழந்தைகள் பாதுகாப்பான, அன்பான சூழலில் வளர வேண்டும். ஒவ்வொரு குழந்தைக்கும் கல்வி, சத்தான உணவு, மருத்துவப் பராமரிப்பு கிடைப்பதுடன், அச்சமின்றி கற்கும் வாய்ப்பும் அவசியம். குழந்தைகள் தங்கள் சிக்கல்களைத் தெரிவிக்கக்கூடிய மரியாதையான சூழலைப் பள்ளிகள் உருவாக்க வேண்டும். பெற்றோர், ஆசிரியர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் இணைந்து ஆபத்துகளை முன்கூட்டியே கண்டறிந்து குழந்தைகளைப் பாதுகாக்க வேண்டும்.

பெண்களும் குழந்தைகளும் தங்களைப் பாதிக்கும் முடிவுகளில் தங்கள் கருத்தைத் தெரிவிக்க வாய்ப்பளிப்பதே உண்மையான மேம்பாட்டின் தொடக்கம். வழிகாட்டுதல், ஆதரவு சேவைகள், திறன் பயிற்சி ஆகியவற்றை வழங்குவதில் சமூக அமைப்புகள், பள்ளிகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் முக்கியப் பங்காற்றலாம்.

அறிவிப்புகளால் மட்டும் முன்னேற்றத்தை அளவிட முடியாது. பாதுகாப்பான சூழல், தரமான கல்வி, மருத்துவ வசதி, சம வாய்ப்பு ஆகியவை மக்களின் வாழ்வில் உண்மையாகக் கிடைக்கும்போதுதான் மாற்றம் உறுதியாகும். பெண்களின் கண்ணியமான வாழ்வும், குழந்தைகளின் நம்பிக்கையான எதிர்காலமும் சமூகத்தின் பகிரப்பட்ட கடமையாகும்.

எழுதியவர்: ப. பாண்டியராஜன்

தமிழகத்தில் டிசம்பருக்குள் 100% ஹெச்பிவி தடுப்பூசி: பொது சுகாதாரத் துறை!



சென்னை. நவ. 27– மத்திய சுகாதாரத் துறை அமைச்சகம் அண்மையில் வெளியிட்ட தரவுகளின்படி, ஹெச்பிவி தடுப்பூசி செலுத்துவதில் ஆந்திரம் 100 சதவீத இலக்கை எட்டியதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அந்த விகிதம் தெலங்கானாவில் 95.18 சதவீதமாகவும், கர்நாடகத்தில் 93.16 சதவீதமாகவும், கேரளத்தில் 77.02 சதவீதமாகவும் உள்ளன. அதேவேளையில், தமிழகத்தில் 76.12 சதவீத பயனாளிகளுக்கு மட்டுமே தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. இதனால், தென்மாநிலங்களிலேயே கடைசி இடத்தில் தமிழகம் உள்ளது.

இந்தச் செயல்பாடு, பல்வேறு விமர்சனங்களுக்கு வித்திட்ட நிலையில் இதுகுறித்து பொது சுகாதாரத் துறையின் (தடுப்பூசி) இணை இயக்குநர் பி.பரணிதரன் கூறியதாவது:

தமிழகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை வரை 4.2 லட்சம் ஹெச்பிவி தடுப்பூசி தவணைகள் செலுத்தப்பட்டுள்ளன. கடந்த மாதத்தில் மட்டும் 1.6 லட்சம் தவணைகள் செலுத்தப்பட்டுள்ளன. ஆரம்பத்தில் பக்கவிளைவுகள் ஏற்படுமோ என்ற அச்சம் காரணமாகப் பெற்றோர் மற்றும் மாணவிகளிடையே தயக்கம் இருந்தது. ஆனால், தடுப்பூசி போட்டுக்கொண்ட மாணவிகள் நலமாக இருப்பதைப் பார்த்து, தற்போது மக்கள் தாமாக முன்வந்து தடுப்பூசி செலுத்திக் கொள்கின்றனர்.

தேர்வுக் காலங்கள் மற்றும் தேர்தல் பணிகள் காரணமாகவும் தடுப்பூசி செலுத்தும் வேகம் சற்று குறைந்திருந்தது. தற்போது மருத்துவர்கள் நேரடியாகப் பள்ளிகளுக்குச் சென்று விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகின்றனர். தமிழகத்தில் 14 வயதுக்கு உள்பட்ட 7.76 லட்சம் சிறுமிகள் உள்ளனர். வரும் டிசம்பர் மாதத்துக்குள் 100% இலக்கை எட்டத் தீவிர முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றார்.

ஆந்திரா கடலில் மாயமான 7 மீனவர்கள் மீட்பு!

விசாகப்பட்டினம், நவ. 27– ஆந்திராவின் காக்கிநாடாவை சேர்ந்த 7 மீனவர்கள் சமீபத்தில் கடலுக்கு மீன்பிடிக்க சென்று மாயமாகி இருந்தனர். அவர்களை மீட்பதற்கு மத்திய–மாநில அரசுகள் தீவிர தேடுதல் வேட்டை நடத்தின.

கடற்படை, கடலோர காவல் படை மற்றும் ஒடிசாவை சேர்ந்த அதிகாரிகளும் இணைந்து இந்த தேடும் பணிகளை நடத்தினர். அண்டை நாடுக ளான வங்காளதேசம், மியான்மர் கடற்பகுதிகளிலும் தேடுதல் வேட்டை நடந்தது. இதன் பலனாக ஆந்திராவின் கிருஷ்ணாபுரம் கடற்பகுதியில் 7 மீனவர்களும் கண்டுபிடிக்கப்பட்டனர். அவர்கள் படகு என்ஜின் பழுதானதால் அங்கேயே சிக்கியிருந்தது கண்டறியப்பட்டது. கரையில் இருந்து 3 கி.மீ. தொலைவில் சிக்கியிருந்த அவர்களை மீட்ட அதிகாரிகள், பின்னர் பத்திரமாக கரைக்கு மீட்டு வரும் பணிகளை தொடங்கினர்.

ஏழுமலையானுக்கு ரூ.208 கோடி தங்க ஆபரணங்கள் காணிக்கை!



சென்னை, நவ. 27– சென்னையைச் சேர்ந்த தொழிலதிபர் வர்தமான் ஜெயினும், அவரது மனைவி ராதிகாவும் திருப்பதி ஏழுமலையான் கோயிலுக்கு 121 கிலோ எடையுள்ள, சுமார் ரூ.208 கோடி மதிப்பிலான தங்க ஆபரணங்களை காணிக்கையாக வழங்கினர். ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு முன்னிலையில், ஆபரணங்கள் தேவஸ்தானத்திடம் ஒப்படைக்கப்பட்டன.

கிரீடம், ஒட்டியாணம், சங்கு, சக்கரம் உள்ளிட்ட 46 வகை ஆபரணங்கள் இந்தத் தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. தேவஸ்தான வரலாற்றில் தனிநபர் ஒருவர் வழங்கிய மிகப்பெரிய காணிக்கை இது எனக் கூறப்படுகிறது. வர்தமான் ஜெயின், கல்வி, மருத்துவம் மற்றும் சமூக நலப் பணிகளுக்கும் தொடர்ந்து நன்கொடை வழங்கி வருகிறார்.

8-வது சம்பள கமிஷன்: அரியர் ரூ.6.78 லட்சம்?



புதுடெல்லி, நவ. 27– மத்திய அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களின் ஊதியத்தை மறுஆய்வு செய்ய அமைக்கப்பட்டுள்ள 8–வது சம்பள கமிஷன், தனது இறுதி அறிக்கையை அடுத்த ஆண்டு ஜூன் மாதம் சமர்ப்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அறிக்கை தயாரிப்பு மற்றும் ஃபிட்மென்ட் ஃபேக்டர் நிர்ணயிக்கும் பணிகள் விரைவில் தொடங்கும் எனக் கூறப்படுகிறது.

7–வது சம்பள கமிஷனில் 2.57 ஃபிட்மென்ட் ஃபேக்டர் பயன்படுத்தப்பட்டது. அதே அளவு 8–வது கமிஷனிலும் தொடர்ந்தால், நிலை–1 ஊழியர்களின் குறைந்தபட்ச அடிப்படை ஊதியம் ரூ.18,000–லிருந்து ரூ.46,260 ஆக உயரக்கூடும்.

புதிய ஊதியம் 2028 ஜனவரி முதல் அமலானால், 2026 ஜனவரி முதல் 24 மாதங்களுக்கான அடிப்படை ஊதிய வித்தியாசமாக சுமார் ரூ.6.78 லட்சம் அரியர் கிடைக்கலாம் என உத்தேசிக்கப்பட்டுள்ளது. எனினும், இது உறுதியான தொகையல்ல. அகவிலைப்படி, பிற படிகள், திருத்தப்பட்ட ஊதிய அமைப்பு மற்றும் அமலாக்கத் தேதி ஆகியவற்றைப் பொறுத்து அரியர் மாறலாம். இறுதி முடிவை மத்திய அரசு அறிவிக்கும்.

எம்.எல்.ஏ., மீதான புகார்: கலெக்டர் ரகசிய வாக்குமூலம்!



கள்ளக்குறிச்சி, நவ. 27– கள்ளக்குறிச்சி த.வெ.க., எம்.எல்.ஏ., அருள் விக்னேஷ் ஆபாசக் குறுஞ்செய்தி அனுப்பியதாக அளிக்கப்பட்ட புகாரில், கலெக்டர் நேற்று விரைவு நீதிமன்ற நீதிபதி முன் இரண்டரை மணி நேரம் ரகசிய வாக்குமூலம் அளித்தார்.

சென்னை உயர் நீதிமன்ற உத்தரவின்படி, ஐ.ஜி., காமினி மேற்பார்வையில் எஸ்.பி., சிருஷ்டி சிங் விசாரணை நடத்தி வருகிறார். கலெக்டர், மாவட்ட வருவாய் அலுவலர், ஆர்.டி.ஓ., வட்டாட்சியர் உள்ளிட்டோரிடமும் விசாரணை நடைபெற்றது. வழக்கில் எம்.எல்.ஏ., மீது ஐந்து பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பெண் அரசு ஊழியர்களின் பாதுகாப்பையும், புகாரில் விரைந்து நீதியையும் உறுதி செய்ய வேண்டும் என அரசு ஊழியர் சங்க நிர்வாகி செந்தாமலர் வலியுறுத்தியுள்ளார். இதுவரை எம்.எல்.ஏ.,விடம் விசாரணை நடத்தப்படவில்லை எனக் கூறப்படுகிறது

பல்கலை. துணைவேந்தர்கள் நியமனம்: முதல்வர் விஜய்க்கு ஆளுநர் கடிதம்!



சென்னை, நவ. 27– தமிழகத்தில் காலியாக உள்ள பல்கலைக்கழகங்களில் துணைவேந்தர்கள் நியமனம் செய்வது தொடர்பாக முதல்வர் ஜோசப் விஜய்க்கு ஆளுநர் ஆர்.வி.ஆர்லேகர் கடிதம் எழுதியுள்ளார். இதுதொடர்பாக அவர் எழுத்தியுள்ள அந்தக் கடிதத்தில் கூறப்பட்டிருப்பதாவது:

பல்வேறு மாநில பல்கலைக்கழகங்களில் துணைவேந்தர் காலிப் பணியிடங்கள் மற்றும் அதன் விளைவாக பட்டமளிப்பு விழாக்கள் நடத்துவதில் தாமதம், பல்கலைக்கழகங்களின் அன்றாட நிர்வாகம் பாதிக்கப்பட்டு வருகிறது. இந்தப் பிரச்னைகளைத் தீர்ப்பதில் முதல்வரின் தனிப்பட்ட தலையீடு தேவை.

தற்போது, பல்கலைக்கழகங்கள் தொடர்பான நிர்வாக முடிவுகள், அரசால் அமைக்கப்பட்ட ஒருங்கிணைப்பாளர் குழுவின் மூலம் எடுக்கப்பட்டு வருகின்றன. இருப்பினும், இந்த ஏற்பாடு பயனுள்ளதாக இல்லை. மேலும் திறமையான நிர்வாகத்தையும் கல்வி நடவடிக்கைகளின் தொடர்ச்சியையும் உறுதி செய்வதற்காக, அந்தந்தப் பல்கலைக்கழகச் சட்டங்கள் மற்றும் பல்கலைக்கழக மானியக் குழுவின் விதிமுறைகளுக்கு இணங்க, முழுநேர துணைவேந்தர்களை நியமிப்பதற்கான பொருத்தமான ஏற்பாடுகளைச் செய்வது அவசியமாகும்.

அதே நேரத்தில், சட்டப்படி அனுமதிக்கப்பட்ட இடங்களில், நிலுவையில் உள்ள அனைத்துப் பட்டமளிப்பு விழாக்களையும் கூடிய விரைவில் நடத்துவதற்காக, பல்கலைக்கழகம் வாரியாக ஒரு கால அட்டவணை உருவாக்கப்படலாம். இதன்மூலம், மாணவர்கள் மேலும் பாதிக்கப்படாமல் இருப்பார்கள்.

தேடல் மற்றும் தேர்வுக் குழுவில், பொருந்தக்கூடிய சட்ட விதிகள் மற்றும் நீதிமன்ற வழிகாட்டுதல்களுக்கு உள்பட்டு உறுப்பினர்கள் இடம்பெறலாம். வேந்தரின் ஒரு பிரதிநிதி, பல்கலைக்கழக சிண்டிகேட்டின் ஒரு பிரதிநிதி, யுஜிசி தலைவரின் ஒரு பிரதிநிதி, மாநில அரசின் ஒரு பிரதிநிதி, உறுப்பினர்கள், நேர்மை மற்றும் தொழில்முறைத் தகுதியுடன் கூடிய புகழ்பெற்ற கல்வியாளர்களாகவும் நிபுணர்களாகவும் இருக்க வேண்டும்.

இந்தக் குழுவானது, எதிர்பார்க்கப்படும் காலிப் பணியிடத்துக்கு 6 மாதங்களுக்கு முன்னதாகவே இந்தச் செயல்முறையைத் தொடங்க வேண்டும். இந்தக் குழு அமைக்கப்பட்ட 15 நாள்களுக்குள் அந்தப் பதவிக்கான அறிவிப்பை வெளியிட வேண்டும். மேலும், அறிவிப்பு வெளியான 2 மாதங்களுக்குள் பரிசீலனையையும் நேர்காணல்களையும் முடிக்க வேண்டும். மிக முக்கியமாக, குழுவானது ஒருமனதான முடிவின் மூலம், தகுதியான 3 பேரை தேர்வுப் பட்டியலில் சேர்த்து, அவர்களுக்கு முன்னுரிமை வரிசைப்படி தரவரிசைப்படுத்த வேண்டும். பரஸ்பர கலந்தாலோசனை மற்றும் ஒத்துழைப்பின் மூலம், விரைவான மற்றும் சட்டபூர்வமாக நிலைத்திருக்கக்கூடிய ஒரு தீர்வை எட்ட முடியும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். பல்கலைக்கழகங்களின் நலன் மற்றும் பட்டங்களுக்காகக் காத்திருக்கும் ஆயிரக்கணக்கான மாணவர்களின் நலனைக் கருத்தில்கொண்டு, முன்மொழியப்பட்ட இந்த வழிமுறையை எளிதாக்கவும், நிலுவையில் உள்ள பட்டமளிப்பு விழாக்களை விரைவுபடுத்தவும் முதல்வரின் தலையிட வேண்டும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கூட்டுறவு சங்கங்கள் மூலம் டாஸ்மாக்!



சென்னை, நவ. 27– தமிழ்நாட்டில் மதுபான சில்லறை விற்பனை என்பது டாஸ்மாக் நிறுவனத்தின் கட்டுப்பாட்டில் இருந்து வருகிறது. மாநிலம் முழுவதும் தற்போது 4 ஆயிரத்து 48 டாஸ்மாக் மதுபான சில்லறை விற்பனைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன. இந்த கடைகளில் மேற்பார்வையாளர்கள், விற்பனையாளர்கள், உதவி விற்பனையாளர்கள் என 22 ஆயிரத்து 877 பேர் பணியாற்றி வருகின்றனர். இந்த நிலையில் டாஸ்மாக் மதுபானக் கடைகளை நடத்தும் முறையில் முக்கிய மாற்றம் செய்யப்பட்டுள்ளது. டாஸ்மாக் நிறுவனம் நேரடியாக நடத்தும் கடைகளுடன், டாஸ்மாக் நிறுவனத்தின் முகவர்களாக கூட்டுறவு சங்கங்களும் மதுபானக் கடைகளை நடத்துவதற்கு தமிழக அரசு அனுமதி அளித்துள்ளது.

இதுதொடர்பாக உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை வெளியிட்டுள்ள அரசாணையில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாட்டில் மதுபான சில்லறை விற்பனைக் கடைகளை டாஸ்மாக் நிறுவனம் நேரடியாக நடத்தலாம். அதேபோல் டாஸ்மாக் நிறுவனத்தின் முகவர்களாக செயல்படும் கூட்டுறவு சங்கங்கள் மூலமாகவும் இந்தக் கடைகளை நடத்தலாம். இதன்படி, ஒரு மாவட்டத்தில் உள்ள மதுபான சில்லறை விற்பனைக் கடைகளுக்கான அங்கீகாரத்தை டாஸ்மாக் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் வழங்க வேண்டும். அந்த அங்கீகாரத்தில், சம்பந்தப்பட்ட கடை டாஸ்மாக் நிறுவனத்தால் நேரடியாக நடத்தப்படுகிறதா அல்லது டாஸ்மாக் நிறுவனத்தின் முகவராக செயல்படும் கூட்டுறவு சங்கத்தின் மூலம் நடத்தப்படுகிறதா என்பதும் குறிப்பிடப்பட வேண்டும்.

மேலும், ஒவ்வொரு மதுபானக் கடைக்கும் தனித்தனியாக அங்கீகாரம் வழங்கும் நடைமுறையும் வகுக்கப்பட்டுள்ளது. இதற்கான அதிகாரம் சம்பந்தப்பட்ட மாவட்ட டாஸ்மாக் மேலாளருக்கு வழங்கப்பட்டுள்ளது. ஒரு மாவட்டத்தில் செயல்படும் அனைத்து மதுபானக் கடைகளின் பட்டியலையும் டாஸ்மாக் நிறுவனம் சம்பந்தப்பட்ட கலெக்டருக்கு வழங்க வேண்டும். அந்தப் பட்டியலில் டாஸ்மாக் நிறுவனம் நேரடியாக நடத்தும் கடைகள், கூட்டுறவு சங்கங்கள் மூலம் நடத்தப்படும் கடைகள் என்ற விவரங்கள் தனித்தனியாக இடம்பெற வேண்டும்.

புதிதாக ஒரு மதுபானக்கடை செயல்பட தொடங்கினால், அந்தக் கடை தொடங்கிய 10 நாட்களுக்குள் அதன் விவரங்களை கலெக்டரிடம் தெரிவிக்க வேண்டும். அதேபோல், ஏற்கனவே செயல்பட்டு வரும் ஒரு கடையின் செயல்பாட்டில் மாற்றம் ஏற்பட்டாலும், அந்த மாற்றம் குறித்த விவரத்தை 10 நாட்களுக்குள் கலெக்டரிடம் தெரிவிக்க வேண்டும். மதுபான சில்லறை விற்பனையில் டாஸ்மாக் நிறுவனத்தின் கட்டுப்பாடு தொடர்ந்து இருக்கும். ஆனால், கடைகளை நடத்தும் பணியில் கூட்டுறவு சங்கங்களுக்கும் வாய்ப்பு அளிக்கப்படுகிறது. கூட்டுறவு சங்கங்களுக்கு தனியாக மதுபான விற்பனை உரிமம் வழங்கப்படவில்லை. அவை டாஸ்மாக் நிறுவனத்தின் முகவர்களாக செயல்படும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



12 ராசிகளுக்கான வழிபாடு/ பொதுப் பரிகாரங்கள்!



ஜோதிட மரபில், ஒவ்வொரு ராசிக்கும் குறிப்பிட்ட தெய்வ வழிபாடு, தானம், நற்பணி ஆகியவை பரிந்துரைக்கப்படுகின்றன. இவை பொதுவான ஆன்மிக வழிமுறைகள் மட்டுமே; தனிப்பட்ட ஜாதகத்தில் கிரக நிலைகளைப் பொறுத்து பரிகாரங்கள் மாறுபடலாம்.

மேஷம்: செவ்வாய்க்கிழமை முருகன் அல்லது துர்க்கையை வழிபட்டு, சிவப்பு மலர் சாத்தலாம். ஏழைகளுக்கு உணவு அல்லது சிவப்பு நிறப் பொருட்களைத் தானமாக வழங்கலாம்.

ரிஷபம்: வெள்ளிக்கிழமை மகாலட்சுமியை வழிபட்டு, விளக்கேற்றலாம். பெண்கள் அல்லது ஏழைக் குடும்பங்களுக்கு உணவு, உடை வழங்குவது நற்பணியாகக் கருதப்படுகிறது.

மிதுனம்: புதன்கிழமை விநாயகரை வழிபட்டு, பச்சைப் பயறு தானம் செய்யலாம். மாணவர்களுக்கு புத்தகம், எழுதுபொருட்கள் வழங்கலாம்.

கடகம்: திங்கட்கிழமை சிவபெருமானை வழிபட்டு, பால் அல்லது அரிசி தானம் செய்யலாம். குடும்பத்தினருடன் அமைதியாகப் பேசுவதும் நல்ல பழக்கமாகும்.

சிம்மம்: ஞாயிற்றுக்கிழமை சூரியனை வணங்கி, காலை நேரத்தில் ஆதித்ய ஹிருதயம் அல்லது சூரிய மந்திரம் சொல்லலாம். முதியோருக்கு உதவலாம்.

கன்னி: புதன்கிழமை பெருமாள் அல்லது விநாயகரை வழிபட்டு, பச்சை பயறு தானம் செய்யலாம். மரக்கன்றுகள் நடுவது நற்பணியாகும்.

துலாம்: வெள்ளிக்கிழமை அம்மனை வழிபட்டு, பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு உதவலாம். வீட்டைத் தூய்மையாகவும் ஒழுங்காகவும் வைத்துக்கொள்ளலாம்.

விருச்சிகம்: செவ்வாய்க்கிழமை முருகன் அல்லது ஆஞ்சநேயரை வழிபட்டு, அன்னதானம் செய்யலாம். கோபத்தைக் கட்டுப்படுத்த முயல்வது பயனளிக்கும்.

தனுசு: வியாழக்கிழமை தட்சிணாமூர்த்தி அல்லது குருபகவானை வணங்கி, மஞ்சள் நிறப் பொருட்கள் அல்லது கல்வி உதவிகளை வழங்கலாம்.

மகரம்: சனிக்கிழமை சனீஸ்வரரை வழிபட்டு, எள் தீபம் ஏற்றலாம். முதியோர், உழைப்பாளிகள் அல்லது ஆதரவற்றோருக்கு உதவலாம்.

கும்பம்: சனிக்கிழமை ஆஞ்சநேயரை வழிபட்டு, பொதுநலப் பணிகளில் பங்கேற்கலாம். தேவையுள்ளவர்களுக்கு உணவு வழங்கலாம்.

மீனம்: வியாழக்கிழமை குரு அல்லது தட்சிணாமூர்த்தியை வணங்கி, மாணவர்களுக்கு கல்வி உதவி செய்யலாம்.

வழிபாடுகளுடன் நேர்மை, பொறுமை, உழைப்பு, பிறருக்கு உதவும் மனப்பான்மை ஆகியவற்றையும் கடைப்பிடிப்பது முக்கியம். உடல்நலம், பணம் அல்லது குடும்பப் பிரச்சினைகளுக்கு உரிய நிபுணர்களின் ஆலோசனையையும் பெற வேண்டும்.

சினிமா துளிகள்..!

பாலிவுட் நடிகர் டைகர் ஷெராஃப் துப்பாக்கிச்சூடு வழக்கில் புதிய திருப்பம்!



மும்பையின் ஜுஹு பகுதியில் நடிகர் டைகர் ஷெராப் மீது கடந்த அக்டோபர் 18ம் தேதி துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. இதில் காயங்களுடன் அவர் உயிர் தப்பினார். அவரது ஓட்டுநர் உள்ளிட்ட மேலும் இருவரும் காயமடைந்தனர்.

துப்பாக்கி சூடு நடத்திய மூவரை, ராஜஸ்தான் காவல்துறையினர் அக்டோபர் 19–ம் தேதி ராஜஸ்தானின் கோட்டா நகரில் கைது செய்தனர். அக்டோபர் 20–ம் தேதி டெல்லி காவல்துறையினர் இந்த வழக்கில் தொடர்புடைய 2 பெண்கள் உள்ளிட்ட மேலும் 4 பேரை கைது செய்தனர். இந்த நால்வரும் ஷெராப் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுக்கு ஆயுதங்களை பஞ்சாபிலிருந்து கொண்டுவந்து சேர்த்துள்ளனர்.

பரோடாவில் கைது செய்யப்பட்ட இவர், ஷெராப்பின் துப்பாக்கிச் சூடு சதித்திட்டத்தின் ஒரு பகுதியாக இருந்தவர் எனக் கருதப்படுகிறது. குறிப்பாக, லாரன்ஸ் பிஷ்னோய் கும்பலுடன் தொடர்புடைய அனில் பண்டிட், அங்கித் மூலமாகவே பணபரிமாற்றம் செய்ததாக சந்தேகிக்கப்படுகிறது. இவர், நேபாளம் வழியாக அனில் பண்டிட்டுடன் பணப் பரிவர்த்தனைகள் செய்ததாக ஆதாரங்கள் கிடைத்துள்ளதாகத் தெரிகிறது. பாலிவுட் நடிகர் டைகர் ஷெராஃப் வீட்டின் அருகே நடைபெற்ற துப்பாக்கிச்சூடு வழக்கில் புதிய திருப்பமாக, குற்றம் சாட்டப்பட்டவர்களில் ஒருவர் சிறார் என்பது நீதிமன்ற விசாரணையில் உறுதியாகியுள்ளது. இதையடுத்து, அவருக்கு எதிரான வழக்கை சிறார் நீதிக் குழுமத்துக்கு மாற்ற நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. மேலும், துப்பாக்கிச்சூடு சம்பவத்துக்குப் பின்னால் கிரிப்டோகரன்சி மூலம் பணப் பரிமாற்றம் நடைபெற்றிருக்கலாம் என்ற சந்தேகத்தில், தொடர்புடைய நபர்களிடம் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்

நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



குளிர்கால சரும வறட்சி: பராமரிப்பது எப்படி?



குளிர்காலத்தில் சருமத்தின் ஈரப்பதம் குறைவதால், எண்ணெய்ப் பசை சருமம் கொண்டவர்களுக்கும் இறுக்கம், வறட்சி, சொரசொரப்பு, எரிச்சல் ஏற்படலாம். சருமத்தில் செதில் உதிர்தல் அல்லது எரிச்சல் தொடர்ந்தால், பயன்படுத்தும் பராமரிப்புப் பொருட்களை மாற்றி, தேவையெனில் தோல் மருத்துவரை அணுக வேண்டும் என நிபுணர்கள் அறிவுறுத்துகின்றனர்.

பின்பற்ற வேண்டியவை:

சருமத்துக்கு ஏற்ற மென்மையான கிளென்சரைப் பயன்படுத்தவும்; வெந்நீர், கடினமான சோப்பு, அடிக்கடி முகம் கழுவுதல் ஆகியவற்றைத் தவிர்க்கவும்.

கிளிசரின் அல்லது ஹையலுரோனிக் அமிலம் உள்ள ஈரப்பதமூட்டும் பொருட்களைத் தேர்வு செய்யவும்.

சருமப் பாதுகாப்புக்கு செரமைடு கொண்ட கிரீம் உதவலாம். எண்ணெய் சருமத்துக்கு இலகுவான ஜெல்–கிரீம் பொருத்தமாக இருக்கலாம்.

எரிச்சல் அல்லது சரும உரிதலை ஏற்படுத்தும் அமிலங்கள், ரெட்டினாய்டுகள் போன்றவற்றின் பயன்பாட்டைக் குறைக்கவும்.

குளிர்காலத்திலும் SPF 30 அல்லது அதற்கு மேற்பட்ட சன்ஸ்கிரீனைப் பயன்படுத்தவும்.

போதிய அளவு தண்ணீர் குடிப்பதுடன், சருமத்துக்கு வெளிப்புற ஈரப்பதமூட்டும் கிரீமும் பயன்படுத்தவும்.

சபரிமலைக்கு மாலை அணிந்து பள்ளிக்கு வந்த மாணவர்களுக்கு அனுமதி மறுப்பு?



மதுரை, நவ. 27–

மதுரை நாகமலை புதுக்கோட்டை அருகே தனியார் பள்ளி ஒன்று செயல்பட்டு வருகிறது. இப்பள்ளியில் நூற்றுக்கணக்கான மாணவர்கள் படித்து வருகின்றனர். இந்நிலையில் இந்த பள்ளியில் 6–ம் வகுப்பு படிக்கும் மாணவரும், 7–ம் வகுப்பு படிக்கும் மாணவரும் சபரிமலை அய்யப்பன் கோவிலுக்கு மாலை அணிந்து பள்ளிக்கு வந்தனர். ஆனால் பள்ளி நிர்வாகம் அவர்களை வகுப்பறைக்குள் அனுமதிக்காமல் வெளியே நிற்க வைத்ததாக கூறப்படுகிறது. இதை அறிந்த மாணவர்களின் பெற்றோர் பள்ளிக்கு வந்து நிர்வாகத்தினருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். பின்னர் மாணவர்களை வகுப்பறைக்குள் அனுமதித்ததாக தெரிகிறது. மேலும், தங்கள் குழந்தைகளை வகுப்பறைக்கு வெளியே அமர வைத்த பள்ளி நிர்வாகம் மீது நடவடிக்கை எடுக்குமாறு மாணவர்களின் பெற்றோர் நாகமலைபுதுக்கோட்டை போலீசில் புகார் அளித்தனர். அதன்பேரில் போலீசார் விசாரித்து வருகின்றனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.



இந்திய அரசமைப்பு சாசன தினமான நவம்பர் 26 ஆம் தேதி, பழனி சட்டமன்ற அலுவலகத்தில் அரசமைப்பு சாசன முகப்புரை உறுதிமொழி ஏற்கப்பட்டது. பழனி சட்டமன்ற உறுப்பினர் ரவி மனோகரன் அவர்கள் தலைமையில், மற்றும் மாவட்ட எம்ஜிஆர் இளைஞர் அணி செயலாளர் அன்வர் தீன், பால சமுத்திர பேரூர் கழகச் செயலாளர் சக்திவேல் ஆகியோரின் முன்னிலையில், ஒருங்கிணைப்பு நல்வோர் வட்டம் பொறுப்பாளர்கள், சர்ச்சில் துரை, அபிப் ராஜா சுற்றுச்சூழல் களம், திலகவதி மாவட்ட பொறுப்பாளர் சூரிய நாட்ராயன் இளைஞர் களம் மாதவன் இளைஞர் களம் பொன் முருகானந்தம் சமூக ஆர்வலர் மற்றும் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

பழனி-கொடைக்கானல் சாலையில் கார் கவிழ்ந்தது!



பழனி நவம்பர் 27–

திருச்சி மாவட்டம் முருங்கம்பேட்டை பகுதியை சேர்ந்தவர் நித்திஷ் வயது 26. இவர் தனது மனைவி யமுனாவுடன் காரில் கொடைக்கானல் பூம்பாறைக்கு சென்று விட்டு, திரும்பி வந்து கொண்டிருந்தார். அவரது கார் பழனி தேக்கந்தோட்டம் சாலையில் அண்ணாநகர் பகுதியில் வரும் பொழுது. கட்டுப்பாட்டை இழந்தது. சாலையோர பள்ளத்தில் கவிழ்ந்தது. இதில் ரித்தீஷ் படுகாயம் அடைந்தார். அவரது மனைவி லேசான காயமடைந்தார். இது பற்றி பழனி தாலுகா போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்

பி.எப்-ல் இருந்து யு.பி.ஐ. மூலம் பணம் எடுக்கும் வசதி அடுத்த மாதம் அறிமுகம்!



புதுடெல்லி, நவ 27–

தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி கணக்கில் இருந்து யு.பி.ஐ. மூலம் பணம் எடுக்கும் வசதி அடுத்த மாதம் (டிசம் பர்) அறிமுக ப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி (இ.பி.எப்.) உறுப்பினர்கள் தங்கள் கணக்கில் உள்ள பணத்தை எடுப்பதற்கு, அதற்கான இணையத ளத்தில் பல்வேறு விவரங்களை உள்ளீடு செய்து பெரும் சிரமத்தை எதிர்கொண்டு வருகிறார்கள். எனவே இதை எளிமை ப்படுத்தும் வகையில், யு.பி.ஐ. மூலம் பணம் எடுக்கும் வசதியை கொண்டுவர வருங்கால வைப்பு நிதி நிறுவனம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

தற்போது இந்த வசதி அடுத்த மாத (டிசம்பர்) இறுதிக்குள் அறிமுகம் செய்யப்படும் என்று தகவல் வெளியாகி இருக்கிறது.

யு.பி.ஐ. மூலம் வருங்கால வைப்பு நிதி கணக்கில் இருந்து பணம் எடுக்கும் புதிய வசதிக்கான தொழில்நுட்ப பணிகள் முடிவடைந்துள்ளன. பாதுகாப்பு மற்றும் செயல்திறன் சோதனைகளும் நடத்தப்பட்டுள்ளன. மேலும், குறிப்பிட்ட பயனா ளர்களை கொண்டு 2 கட்ட சோதனைகளும் நடத்தி முடிக்கப்பட்டு ள்ளன. இந்த சோதனையின்போது 102 வருங்கால வைப்பு நிதி சந்தாதாரர்கள் முன்வைத்த கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு, சுமார் ரூ.5 லட்சம் பயனாளர்களின் வங்கி கணக்குகளில் உடனடியாக வரவு வைக்கப்பட்டுள்ளது. இதில் சிறிய தொகைகளுக்கு அடிக்கடி பணம் எடுப்பதால் ஏற்படும் பரிவர்த்தனை சுமையை குறைப்பதற்காக குறைந்தபட்சமாக ரூ.1,000 நிர்ணயிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

'பீம்' செயலி மூலம் இந்த பணப்பரிவர்த்தனை நடைபெறும். இதற்காக தேசிய பணப்பரிவர்த்தனை கழகம், பாரத ஸ்டேட் வங்கி உள்ளிட்ட நிறுவனங்களுடன் இணைந்து தொழில்நுட்ப மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரு கின்றன.

இந்த வசதி நடைமுறைக்கு வந்தால், வருங்கால வைப்பு நிதி கணக்கில் இருந்து பணம் எடுப்பதற்கான ஒப்புதலை பெறுவதற்கும், வங்கி கணக்கில் பணம் வரவு வைக்கப்படுவதற்கும் ஆகும் காலதாமதம் கணிசமாக குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

யு.பி.ஐ. வசதி அறிமுகம் செய்யப்பட்டாலும், தற்போதுள்ள பணம் எடுக்கும் விதிமுறைகளும், வரம்புகளும் தொடர்ந்து நடைமுறையில் இருக்கும் என்றும் கூறப்பட்டு உள்ளது.

2027-ல் 6000 இடங்கள் கூடுதலாகக் கொண்டுவர ஐஐடி திட்டம்!



சென்னை, நவ. 27–

2027 ஆம் ஆண்டு முதல் 6 ஆயிரம் இடங்கள் கூடுதலாகக் கொண்டுவர ஐஐடி திட்டமிட்டுள்ளது. ரோபோடிக்ஸ், விண்வெளி தொழில்நு ட்பம், இயற்பியல் ஏஐ ஆகிய துறை களில் இந்த இடங்கள் கொண்டுவர ப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த ஆண்டிலிருந்து 8 முதல் 10 ஆண்டுகளுக்குள் முழுமையாக 6 ஆயிரம் இடங்கள் கொண்டுவரப்படும் என ஐஐடி தெரிவித்துள்ளது.

பூபத் மற்றும் ஜோதி மேத்தா குடும்பம் ஐஐடியுடன் இணைந்து ரோபோடிக்ஸ், இயற்பியல் ஏஐ, விண்வெளி தொழில்நு ட்பம் ஆகிய துறைகளில் கூடுதல் இடங்களைக் கொண்டுவர திட்டமிட்டு ள்ளது. ஐடிடியில் இளங்கலை, முதுகலை மற்றும் முனைவர் படிப்புக்களுக்கான இடங்கள் இதில் அடங்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஐஐடியின் 120க்கும் அதிகமான பேராசிரியர்கள் இத்துறை விரிவாக்கத்திற்கு ஆதரவளி ப்பார்கள் என எதிர்பார்க்கப்படுவதாக கூறப்படுகிறது.

இதில் முதல் பேட்ஜ் மாணவர்கள் சேர்க்கை 2027 ஆம் ஆண்டு சேர்க்கப்பட்டவுள்ளனர். இந்த முன்னெடுப்பானது வளர்ந்து வரும் தொழில்நுட்பத் துறைகளில் சிறப்புத் திறன் கொண்டவர்களை உருவாக்கவும், வலுப்படுத்தவும் உதவும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பூபத் மற்றும் ஜோதி மேத்தா குடும்ப நிறுவனங்களின் நிறுவனர் ராகுல் மேத்தா. இவர் உயர் கல்வி, உள்கட்டமைப்பு ஆய்வு, சிறப்பு கல்வித் திட்டங்களில் கவனம் செலுத்தி வருகிறார். இதற்காக கல்வி நிறுவனங்களின் ஆதரவையும் திரட்டி வருகிறார். 2019 ஆம் ஆண்டு முதல் 6 ஐஐடிக்களின் ஆதரவைத் திரட்டி, 8 ஐஐடி பள்ளிகளின் ஆதரவையும் பெற்றுள்ளார். இத்திட்டத்தில் இதுவரை 1,400 மாணவர்கள் இணைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜப்பானில் மிதவை ரெயில்: 603 கி.மீ. வேகத்தை எட்டி உலக சாதனை!



ஜப்பான், நவ. 27–

ஜப்பான் நாட்டின் ரெயில்வே நடத்திய சோதனையில் 'எஸ்சிமெக்லவ்' என்ற மின்காந்த மிதவை ரெயிலானது, மணிக்கு 603 கி.மீ. வேகத்தை எட்டி உலக சாதனை படைத்தது.

ஜப்பான் நாட்டின் கண்டுபிடிப்பான 'எஸ்சிமெக்லவ்' என்ற மின்காந்த மிதவை ரெயிலானது தண்டவாளத்தில் இருந்து 10 செ.மீ. உயரத்தில் மிதந்து செல்லும். இது உலகின் அதிநவீன போக்குவரத்து தொழில்நுட்பங்களில் ஒன்றாக கருதப்படுகிறது.

நாம் பார்க்கும் மின்சார ரெயில்கள், உயரே உள்ள மின்கம்பி வடத்தில் இருந்து மின்சாரத்தை பெற்று தண்டவாளத்தில் இயங்குகின்றன. ஆனால் ஜப்பான் நாட்டின் ரெயில்வே நடத்திய சோதனையில் 'எஸ்சிமெக்லவ்' ரெயில் மணிக்கு 603 கி.மீ. வேகத்தை எட்டி உலக சாதனை படைத்தது.

10 செ.மீ. உயரத்தில் மிதக்கும் ரெயில்

இந்த ரெயில் தொழில்நுட்பத்தில் சூப்பர் கண்டக்டிங் என்ற மீள்கடத்தும் காந்தங்கள் பயன்படுத்தப்படுகின்றன. மிகக்குறைந்த வெப்பநிலையில் செயல்படும் இந்த காந்தங்கள், வலிமையான காந்த புலத்தை உருவாக்குகின்றன. பாதையின் இருபுறங்களிலும் அமைக்கப்பட்டுள்ள மின் காந்த சுருள்களுடன் இவை தொடர்புகொண்டு ரெயிலை சுமார் 10 செ.மீ. உயரத்தில் மிதக்க செய்கின்றன.

இதன் இயக்கத்திற்கு நேரியல் மின்மோட்டார் பயன்படுத்தப்படுகிறது. பாதையில் உள்ள மின்சார சுருள்கள் உருவாக்கும் நகரும் காந்தப்புலம் மூலம் ரெயிலை முன்னோக்கி உந்தி அதிவேகமாக தள்ளுகிறது. இந்த ரெயில் புறப்பட்டு விரைவாக வேகத்தை எட்ட தண்டவாளங்களில் ரப்பர் சக்கரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. வேகத்தை எட்டியதும் சக்கரங்கள் மேலே மடங்கி, காந்த மிதவை மூலம் பயணத்தை தொடங்குகிறது. நவீன அறிவியலின் மின்காந்தவியல், மீள்கடத்தும் இயற்பியல், மின்னணுவியல் ஆகிய தொழில்நுட்பங்களை ஒருங்கிணைத்து, மிதக்கும் ரெயிலை ஜப்பான் ஆராய்ச்சியாளர்கள், என்ஜினீயர்கள் உருவாக்கி உள்ளது குறிப்பிடத்தக்கது.

அடுத்த ஆட்குறைப்பு.. 10,000 ஊழியர்கள் வேலைக்கு ஆப்பு வைக்கும் பிரபல சாப்ட்வேர் நிறுவனம்!



ஜெர்மனி, நவ. 27–

ஜெர்மனியின் முன்னணி மென்பொருள் நிறுவனமான SAP, 10,000 ஊழியர்களை ஆட்குறைப்பு செய்ய திட்டமிட்டுள்ளது.

செயற்கை நுண்ணறிவால் உலகம் முழுவதும் மனிதர்களின் வேலை பறிக்கப்பட்டு வருகிறது. பெரு நிறுவனங்கள் முதல் சிறு நிறுவனங்கள் வரை பணத்தை மிச்சப்படுத்த மனிதர்களை பணிநீக்கம் செய்துவிட்டு செயற்கை நுண்ணறிவை பயன்படுத்தி வருகின்றன.

அமேசான் உள்ளிட்ட உலகின் முன்னணி நிறுவனங்கள் கடந்த சில ஆண்டுகளில் பணிநீக்கம் செய்த ஊழியர்களின் எண்ணிக்கை லட்சங்களை தாண்டும்.

இந்நிலையில் ஜெர்மனியின் முன்னணி மென்பொருள் நிறுவனமான SAP மற்றொரு பெரிய ஆட்குறைப்புக்குத் தயாராகி வருகிறது.

உலகளவில் குறைந்தது 10,000 வேலைகளைக் குறைக்கும் திட்டத்தை அந்நிறுவனம் பரிசீலித்து வருவதாக ப்ளூம்பெர்க் அறிக்கை தெரிவிக்கிறது.

உலகளவில் 1.10 லட்சம் ஊழியர்களை கொண்டது SAP நிறுவனம். எனவே மொத்த ஊழியர்களில் இது சுமார் 9 சதவீதத்திற்குச் சமமாகும்.

நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரி கிறிஸ்டியன் க்ளீன் தலைமையில், இந்நிறுவனம் தனது மென்பொருள் பணிகளில் ஏஐ தொழில்நுட்ப பயன்பாட்டை அதிகரிக்க திட்டமிட்டுள்ளது. செலவுகளைக் கட்டுப்படுத்தி க்கொண்டே, ஏஐ அடிப்படையிலான தயாரிப்புகளுக்கான வளர்ந்து வரும் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் வணிகத்தை மாற்றுவதே இந்த மறுசீரமைப்பின் முக்கிய நோக்கமாகத் தெரிகிறது.

இதன் ஒரு பகுதியாக, தயாரிப்பு, பொறியியல் மற்றும் விற்பனைத் துறைகளில் அதிக கவனம் செலுத்தப்படுவதாக கூறப்படுகிறது.

ஏஐ மேம்பாட்டிற்கு நிறுவனத்தின் பட்ஜெட்டை அதிகரிக்க SAP ஏற்கனவே சில கடுமையான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. கடந்த ஜூலை மாதம், ஏஐ தொடர்பான பதவிகளைத் தவிர மற்ற புதிய ஆட்சேர்ப்புகளை அது நிறுத்தியது. அதே நேரத்தில், நிறுவனத்தின் உயர் மட்டத்திலும் மாற்றங்கள் நடைபெற்று வருகின்றன. தயாரிப்புத் தலைவர் மற்றும் விற்பனைத் தலைவர் போன்ற முக்கிய நிர்வாகிகளின் விலகல் இந்த மாற்றங்களின் அறிகுறியாகும்.

கடந்த மூன்று ஆண்டுகளில் SAP மேற்கொள்ளும் இரண்டாவது பெரிய மறுசீரமைப்பு இதுவாகும்.

ஜனவரி 2024ல் சுமார் 9,000 முதல் 10,000 வரையிலான வேலைகள் குறைக்கப்பட்டுள்ளன.

SAP நிறுவனம், வழக்கமாக இதுபோன்ற முக்கிய அறிவிப்புகளை ஜனவரி மாத இறுதியில் அந்த ஆண்டின் திட்ட முடிவுகளுடன் வெளியிடும்.

எனவே, விரைவில் ஒரு அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அம்பாசமுத்திரம், பெருந்துறையில் இடைத்தேர்தல்!



சென்னை, நவ. 27–

அம்பாசமுத்திரம், பெருந்துறை சட்டப்பேரவைத் தொகுதிகளில் இடைத்தேர்தல் நடத்த விதிக்கப்பட்ட தடையை சென்னை உயர் நீதிமன்றம் நீக்கியுள்ளது. திருச்சி கிழக்கு, கரூர், விராலிமலை தொகுதிகளுக்கான தடை தொடரும் என்றும், அங்கு தேர்தல் வழக்குகள் முடிந்த பிறகே இடைத்தேர்தல் நடத்தலாம் என்றும் நீதிமன்றம் தெரிவித்துள்ளது. ஐந்து தொகுதிகளிலும் இடைத்தேர்தல் அறிவிக்கத் தடை கோரிய பொதுநல வழக்கின் அடிப்படையில், முன்பு தேர்தலுக்கு தடை விதிக்கப்பட்டிருந்தது. முதல்வர் விஜய் மற்றும் முன்னாள் எம்.எல்.ஏ.,க்கள் தாக்கல் செய்த மனுக்களை விசாரித்த உயர் நீதிமன்றம், தற்போது இரு தொகுதிகளுக்கு மட்டும் தடையை நீக்கியுள்ளது.

வேலை வாய்ப்பு
BHEL நிறுவனத்தில் 415 பணியிடங்கள்!



பாரத் ஹெவி எலக்ட்ரிக்கல்ஸ் லிமிடெட் (BHEL) நிறுவனத்தில் பொறியாளர்/நிர்வாகப் பயிற்சியாளர் மற்றும் மேற்பார்வைப் பயிற்சியாளர் பணிகளுக்கு 415 பேர் தேர்வு செய்யப்பட உள்ளனர். தகுதியானவர்கள் ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம்.

அறிவிப்பு எண்கள்: 02/2026, 03/2026

விண்ணப்பம் தொடக்கம்: 25.11.2026, காலை 10 மணி

கடைசி நாள்: 28.12.2026, இரவு 11.45 மணி

பணியிடங்கள்: திருச்சி, ராணிப்பேட்டை உள்ளிட்ட பல்வேறு இடங்கள்

விண்ணப்பிக்க: careers.bhel.in.

பிரதமர், முதல்-அமைச்சர் வந்தால் இரவோடு இரவாக சாலைகளை புதுப்பிப்பது எப்படி? மதுரை ஐகோர்ட்டு!



மதுரை, நவ. 27–

மதுரையைச் சேர்ந்த வக்கீல் ரமேஷ், சாலைப்பணிகளில் விதிமீறல் தொடர்பாக மதுரை ஐகோர்ட்டில் மனு தாக்கல் செய்து இருந்தார். இந்த மனு நீதிபதிகள் வேல்முருகன், ராமகிருஷ்ணன் ஆகியோர் முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது.

அப்போது நீதிபதிகள், சாலைகள் அமைப்பதற்கு என விதிமுறைகளும், ஐகோர்ட்டின் உத்தரவுகளும் உள்ளன. அந்த விதிமுறையை கடைபிடிப்பதே இல்லை. கோர்ட்டு உத்தரவையும் அதிகாரிகள் நிறைவேற்றுவது இல்லை. அதிக கமிஷன் கிடைப்பதில் சாலை அமைக்கும் டெண்டர்கள்தான் முதல் இடத்தை பிடிக்கின்றன என அதிருப்தி தெரிவித்தனர்.

மேலும் நீதிபதிகள் கூறுகையில், பிரதமர், முதல்–அமைச்சர் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் வருகிறார்கள் என்றால் அந்த பகுதியில் இரவோடு இரவாக சாலைகள் புதுப்பிக்கப்படுகின்றன. அதுஎப்படி நடக்கிறது என்றனர். விசாரணை முடிவில், சாலைப்பணி தொடர்பாக காண்டிராக்டர், மாநகராட்சி அதிகாரி, மதுரை மாநகராட்சி தலைமை பொறியாளர், மாநகராட்சி கமிஷனர் ஆகியோர் நேரில் ஆஜராகி, சாலை டெண்டர் விவரங்கள் குறித்து அறிக்கை அளிக்க வேண்டும் என உத்தர விட்டனர்.

வீடுகளுக்கு நேரடியாக ரேஷன் வழங்கும் திட்டம் விரிவாக்கம் - தமிழக அரசு!



சென்னை, நவ. 27–

ரேஷன் அட்டைதாரர்கள் ரேஷன் பொருட்களை வாங்க நேரடியாக கடைக்கு வந்து விரல் ரேகை பதிவு மூலம் பொருட்களை வாங்கிச் செல்லும் நடைமுறை தற்போது பின்பற்றப்பட்டு வருகிறது. ஆனால் தனியாக வசிக்கும் முதியவர்கள் ரேஷன் பொருட்களை வாங்குவதற்கு சிரமம் ஏற்படுகிறது.

இதனால், 70 வயதுக்கு மேற்பட்ட முதியவர்கள், மூத்த குடிமக்களின் வீடுகளுக்கு நேரடியாக ரேஷன் பொருட்கள் வழங்கும் திட்டம் 2025–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் தொடங்கப்பட்டது. கடை ஊழியர்கள் மாதத்தின் முதல் வாரத்தில், வாகனங்களில் பொருட்களை எடுத்து சென்று, வீடுகளில் வினியோகம் செய்கின்றனர்.

கடந்த அக்டோபர் மாதம் முதல், இந்த திட்டம் விரிவாக்கம் செய்யப்பட்டு, 65 வயதுக்கு மேற்பட்டவர்களின் வீடுகளுக்கு பொருட்கள் வழங்கப்படுகின்றன. மொத்தம் 19.30 லட்சம் ரேஷன் அட்டைதாரர்களுக்கு பொருட்கள் வழங்கப்படுகின்றன.

இத்திட்டம் மேலும் விரிவாக்கம் செய்யப்பட உள்ளதாக, தமிழக பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டது. அதன்படி, திருநங்கையர், கைம்பெண்கள், முன்னாள் ராணுவத்தினர் உள்பட கூடுதலாக, 2.27 லட்சம் ரேஷன் அட்டைதாரர்களின் வீடுகளுக்கு நேரடியாக ரேஷன் பொருட்கள் வழங்கப்பட உள்ளன. இதன் மூலம் 4.89 லட்சம் பேர் பயன்பெறுவர்.

அவர்களின் வீடுகளில் வரும் டிசம்பர் மாதம் முதல் ரேஷன் பொருட்கள் நேரடியாக வழங்கப்பட உள்ளன. இதற்காக ஆண்டுக்கு 11 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்து அரசு உத்தரவிட்டுள்ளது.



இஸ்மாயில் லக்கி ட்ராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882

மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ் பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது

சென்னை
Ph: 98659 88881



இன்றைய கார்ட்டூன்



முதலமைச்சர் விஜயின் மனுவை தள்ளுபடி செய்தது உயர்நீதிமன்றம்!



சென்னை, நவ. 27–

சென்னை உயர்நீதிமன்றம், முதல மைச்சர் விஜய் தாக்கல் செய்த மனுவை நிராகரித்து, சொத்து விவரங்களை மறைத்ததாக கூறி தொடரப்பட்ட தேர்தல் வழக்கை தொடர்ந்து விசாரிக்கலாம் என தீர்ப்பளித்தது.

பெரம்பூர் தொகுதியில், 53 ஆயிரத்து 715 வாக்குகள் வித்தியாசத்தில் முதலமைச்சர் விஜய் வெற்றி பெற்றதை எதிர்த்து தொகுதி வாக்காளர் தினேஷ் என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் தேர்தல் வழக்கை தாக்கல் செய்திருந்தார். இந்த வழக்கை நிராகரிக்கக் கோரி முதலமைச்சர் விஜய் தரப்பில் மனுத்தாக்கல் செய்யப்பட்டிரு ந்தது. இந்த மனுவை நீதிபதி வி.லட்சுமிநாராயணன் விசாரித்தார்.

முதலமைச்சர் விஜய் தரப்பில், வேட்புமனுவில் அனைத்து தக வல்களையும் தெரிவித்துள்ளதாகவும், எந்த தகவலையும் மறைக்கவில்லை என வாதிடப்பட்டது. வேட்புமனுவில் தகவல்களை மறைப்பது வாக்காளர்கள் சுதந்திரமாக முடிவெடுப்பதில் தாக்கத்தை ஏற்படுத்தும் என சென்னை உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பு, குற்ற வழக்கு சம்பந்தப்பட்டது. விஜய் வசதிபடைத்தவர் என எல்லா வாக்காளருக்கும் தெரியும். அப்படி இருக்கும் போது, சொத்தை மறைத்ததாகக் கூறி, அது வாக்காளர் மத்தியில் தாக்கத்தை ஏற்படுத்தும் என எப்படி கூற முடியும் என வாதிடப்பட்டது.

தேர்தல் வழக்கை தாக்கல் செய்திருந்த வாக்காளர் தினேஷ் தரப்பில், முதலமைச்சர் விஜய் தனது வேட்புமனுவில், பண்ருட்டியில் வாங்கியிருந்த 30 கோடி ரூபாய் மதிப்பிலான விவசாய நிலம் குறித்த விவரங்களை தெரிவிக்கவில்லை என வாதிடப்பட்டது. வேட்புமனுக்களில் குற்ற வழக்குகளை மறைப்பது எப்படி விதிமீறலோ, அதேபோல சொத்து விவரங்களை மறைப்பதும் விதிமீறல் மட்டுமல்ல ஊழல் நடவடிக்கை. விவரங்கள் மறைத்தது குறித்து தேர்தல் அதிகாரி முழுமையான விசாரணை நடத்தமுடியாது. தேர்தல் வழக்கில் தான் இதுகுறித்து விரிவாக விசாரிக்க முடியும் என்பதால், தேர்தல் வழக்கை நிராகரிக்கக் கூடாது என வாதிடப்பட்டது. அனைத்து தரப்பு வாதங்களும் முடிவடைந்ததை அடுத்து, முதலமைச்சர் விஜய் மனு மீதான தீர்ப்பு தேதி குறிப்பிடாமல் தள்ளிவைக்கப்பட்டிருந்த நிலையில், அந்த மனு தீர்ப்புக்காக இன்று பட்டியலிடப்பட்டது.

அதனை தொடர்ந்து அந்த மனு மீதான தீர்ப்பு அளிக்கப்பட்டது. தீர்ப்பில், சொத்து விவரங்களை மறைத்து விஜய் தேர்தலில் போட்டியிட்டுள்ளதால் வெற்றி செல்லாது என அறிவிக்க கோரிய வழக்கை தொடர்ந்து விசாரிக்கலாம் என கூறிய நீதிபதி, தினேஷ் தாக்கல் செய்த மனுவை நிராகரிக்க கோரி முதலமைச்சர் விஜய் தாக்கல் செய்த மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டார்.

கள்ளக்குறிச்சி எம்எல்ஏ வழக்கு விசாரணை: இருதரப்பு வழக்கறிஞர்களுக்கு மட்டுமே அனுமதி!



சென்னை, நவ. 27–

பெண் ஐஏஎஸ் அதிகாரிக்கு ஆபாச குறுஞ்செய்தி அனுப்பியதாக தவெக எம்எல்ஏவுக்கு எதிரான வழக்கு விசாரணையை பிற்பகல் 3.30 மணிக்கு தள்ளிவைத்த நீதிபதி, விசாரணையின்போது, இருதரப்பு வழக்கறிஞர்கள் தவிர வேறு யாரு க்கும் அனுமதியில்லை எனத் தெரிவித்துள்ளார்

பெண் ஐஏஎஸ் அதிகாரிக்கு, தவெக எம்எல்ஏ தகாத குறுஞ்செய்தி அனுப்பியது தொடர்பாக நாளிதழ்கள், ஊடகங்களில் வெளிவந்த செய்திகளின் அடிப்படையில் வழக்குப்பதிவு செய்ய போலீஸாருக்கு உத்தரவிடக் கோரி அதிமுக வழக்கறிஞர் ஆர். திரிசூலி சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த உயர்நீதிமன்றம், திருப்பூர் எஸ்.பி. சிருஷ்டி சிங்கை விசாரணை அதிகாரியாகவும், நிர்வாகப் பிரிவு ஐஜி காமினியை கண்காணிப்பு அதிகாரியாகவும் நியமித்து உத்தரவிட்டிருந்தது. மேலும் விசாரணை தொடர்பான விவரங்களை வெளியிட செய்தி நிறுவனங்க ளுக்குத் தடை விதித்தும் உத்தரவிட்டிருந்தது.

இந்த நிலையில், இந்த வழக்கு நீதிபதி வி. லட்சுமிநாராயணன் முன் விசாரணைக்கு வந்தபோது, விசாரணையை பிற்பகல் 3.30 மணிக்கு தள்ளிவைத்த நீதிபதி, விசாரணை யின்போது, சம்பந்தப்பட்ட இருதரப்பு வழக்கறிஞர்கள் தவிர வேறு யாருக்கும் அனுமதியில்லை எனக்கூறி விசாரணையை தள்ளிவைத்தார்.

அன்பில் மகேஸுக்கு எதிரான வழக்கு: நீதிபதி அருள்முருகன் விலகல்!



சென்னை, நவ. 27–

தனியார் பள்ளிகளுக்கு அங்கீகாரம் வழங்க லஞ்சம் பெற்றதாக முன்னாள் அமைச்சர் அன்பில்மகேஸ்உள்ளிட்டோருக்கு எதிராக பதிவு செய்யப்பட்ட வழக்கை சிபிஐ விசாரணைக்கு மாற்றக் கோரிய வழக்கில் இருந்து விலகுவதாக நீதிபதி ஜி. அருள்முருகன் அறிவித்தார்.

தனியார் பள்ளிகளுக்கு அங்கீகாரம் மற்றும் அனுமதிகள் பெற்றுத் தருவதாகக் கூறி 400 கோடி ரூபாய் லஞ்சம் பெற்றதாக பதிவு செய்யப்பட்ட வழக்கில், திமுக முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஸ், முன்னாள் எம்எல்ஏ முத்துகுமார், ஓட்டுநர் சரவணன் ஆகியோர் கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலில் சிறையில் அடைக்கப்பட்டு ள்ளனர். இந்த வழக்கை மத்திய குற்றப் பிரிவு போலீஸார் விசாரித்து வருகின்றனர்.

இந்த நிலையில், அன்பில் மகேஸ் உள்ளிட்டோருக்கு எதிரான வழக்கை சிபிஐ விசாரணைக்கு மாற்றக் கோரி திருநெல்வேலியைச் சேர்ந்த வெங்கடாஜலபதி என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் பொதுநல மனு தாக்கல் செய்துள்ளார்.

அந்த மனுவில், கட்சி நிதி என்ற பெயரில் தனியார் பள்ளிகளிடம் இருந்து பணம் வாங்கியிருப்பது தீவிரமான குற்றச்சாட்டாகும். இந்த விவகாரம் தொடர்பாக முன்னாள் மற்றும் இந்நாள் அமைச்சர்கள், அரசு துறைச் செயலாளர்கள், தனியார் பள்ளிகளின் நிர்வாகிகள் ஆகிய சாட்சிகளிடம் விசாரணை நடத்த வேண்டும். தனியார் பள்ளிகளிடம் வாங்கிய பணம் எங்கு சென்றது? வங்கிப் பரிவர்த்தனைகள், முதலீடுகள், சொத்துகள், இதன் மூலம் பயனடைந்தவர்கள் யார் யார்? என்பது குறித்து எல்லாம் விசாரிக்க வேண்டும். அரசியல்வாதிகளுக்கும், அதிகாரிகளுக்கும் தொடர்பு இருப்பதாக கூறப்படும் இந்த வழக்கில், மாநில அரசின் விசாரணை நியா யமாக இருக்குமா என சந்தேகம் எழுகிறது.

புதிதாக தவெக அரசு பதவியேற்ற 7 வார ங்களில் இந்த வழக்குப்பதிவு செய்யப்பட்டு ள்ளது. எனவே, குறிப்பிட்ட நபர்கள் அல்லது இந்த விவகாரத்தில் அரசியல் தாக்கம் இருக்கிறதா என விசாரிக்க வேண்டியுள்ளது. எனவே, இந்த வழக்கின் விசாரணையை நியாயமான மற்றும் பாரபட்சமற்ற விசாரணையை உறுதி செய்யும் வகையில், சிபிஐ–க்கு மாற்ற வேண்டும். மேலும், தனியார் பள்ளிகளிடம் லஞ்சம் பெற்றதற்கு தானே சாட்சி என தமிழக நிதி அமைச்சர் மரியவில்சன் சட்டமன்றத்தில் பேசியுள்ளார், எனவே, அவரிடமும் இந்த வழக்கில் விசாரணை நடத்த வேண்டும் என மனுவில் கூறியிருந்தார். இந்த வழக்கு தலைமை நீதிபதி எஸ்.ஏ. தர்மாதிகாரி மற்றும் நீதிபதி ஜி. அருள்முருகன் ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது இந்த வழக்கில் இருந்து விலகுவதாக நீதிபதி ஜி. அருள்முருகன் தெரிவித்தார். இதையடுத்து, இந்த வழக்கின் விசாரணை வேறொரு அமர்வில் விசாரணைக்குப் பட்டியலிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

குழந்தைத் திருமணத்தைத் தடுப்போம்.. கனவுகளுக்குச் சிறகுகள் கொடுப்போம்!- அமைச்சர் ஜெகதீஸ்வரி!

சென்னை, நவ. 27–

குழந்தைத் திருமண ஒழிப்பு சர்வதேச தினத்தை முன்னிட்டு, குழந்தைகளின் உரிமைகளையும், கல்வியையும், பாதுகாப்பை யும் உறுதி செய்வது நம் அனைவரின் கடமையாகும் என்று சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர்ஜெகதீஸ்வரி தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளி யிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் கூறியிருப்ப தாவது:– குழந்தைத் திருமணமில்லா சமுதாயத்தை உருவாக்குவோம்!

குழந்தைத் திருமண ஒழிப்பு சர்வதேச தினத்தை முன்னிட்டு, குழந்தைகளின் உரிமைகளையும், கல்வியையும், பாதுகாப்பையும் உறுதி செய்வது நம் அனைவரின் கடமையாகும்.

குழந்தைப் பருவம் என்பது கல்வி கற்கவும், கனவுகளைக் காணவும், எதிர்காலத்தை உருவாக்கவும் உரிய பருவம். குழந்தைத் திருமணம் அவர்களின் கல்வி, உடல்நலம், சுயமரியாதை மற்றும் எதிர்கால முன்னேற்றத்தைப் பாதிக்கிறது.

பெண் குழந்தைகளின் கல்வியை ஊக்குவித்து, குழந்தைத் திருமணத்தைத் தடுத்து, ஒவ்வொரு குழந்தைக்கும் பாதுகாப்பான மற்றும் சமத்துவமான எதிர்காலத்தை உருவாக்கிட அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுவோம்.

குழந்தைத் திருமணத்தைத் தடுப்போம்!

பெண் குழந்தைகளின் கனவுகளுக்கு சிறகுகள் கொடுப்போம்!

இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

'அன்பும் - முத்தங்களும்'.. பிறந்த நாளையொட்டி பெற்றோரிடம் வாழ்த்து பெற்ற உதயநிதி!



சென்னை, நவ. 27–

உதயநிதி ஸ்டாலின் தன்னுடைய பிறந்த நாளையொட்டி தந்தையும் திமுக தலைவருமான மு.க.ஸ்டாலின் மற்றும் தாய் துர்காவை சந்தித்து உதயநிதி ஸ்டாலின் வாழ்த்துப் பெற்றார்.

இது தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் தன்னுடைய எக்ஸ் பக்கத்தில் பதிவு வெளியிட்டுள்ளார்.

அந்தப் பதிவில், "பிறந்த நாளை முன்னிட்டு எந்நாளும் அன்போடு வழிநடத்தும் கழகத்தலைவர் – பாசமிகு அப்பாவிடமும் – அரவணைத்து ஊக்குவிக்கும் அம்மாவிடமும் இன்று காலை வாழ்த்துப் பெற்றேன். அம்மா – அப்பாவுக்கு அன்பும் – முத்தங்களும்!" எனப் பதிவிட்டுள்ளார்.

இதேபோன்று மு.க.ஸ்டாலின் தன்னுடைய எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "கொள்கைப் பாதையில் உழைப்பை அடையாளமாக்கி, மக்கள் பணியுடன் இலட்சியப் பயணத்தில் சிறந்திடத் தம்பி உதயநிதி ஸ்டாலினுக்குப் பிறந்தநாள் வாழ்த்துகள்!

சிந்தனைகளால் வளம் பெற்ற தமிழ்ச் சமூகத்தின் எதிர்காலம் காட்சிப் பிழைகளால் தடம் மாறிடாமல் காக்க வேண்டிய பெரும் பொறுப்பைக் காலம் நம்மிடம் வழங்கியுள்ளது.

கழத்தின் ரத்த நாளமாக நான் வளர்த்த இளைஞரணியின் கொள்கைப் பணியில் இனித் தேவை வேகமல்ல, பெரும் பாய்ச்சல்! உன்னுடைய பணியே உன்னைப் பற்றிச் சொல்லும். உழைப்பால் உயர்ந்திடு! இலட்சியப் பாதையில் முன்னேறு! கொள்கையின் வெற்றியில் உன் வாழ்வின் வெற்றியைக் கண்டிடு!" எனப் பதிவிட்டுள்ளார்.

புதிய கேஸ் இணைப்பு வழங்குவது 8 மாதங்களாக நிறுத்தம் - மக்கள் அதிருப்தி!



சென்னை, நவ. 27–

தமிழகத்தில், கடந்த 8 மாதங்களாக, வீடுகளுக்கு புதிய சமையல் கேஸ் சிலிண்டர் இணைப்பு வழங்குவதை, பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்கள் நிறுத்தி வைத்துள்ளதால் மத்திய, மாநில அரசுகள் மீது, மக்கள் அதிருப்தி அடைந்துள்ளனர். பொதுத்துறையைச் சேர்ந்த இந்தியன் ஆயில், பாரத் பெட்ரோலியம், ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் ஆகிய எண்ணெய் நிறுவனங்கள், வீடுகளுக்கு 14.20 கிலோ எடையில், சமையல் கேஸ் சிலிண்ட ர்களை வினியோகம் செய்கின்றன.

இதனிடையே கடந்த மார்ச் மாதம் மேற்காசிய நாடுகளில் ஏற்பட்ட போர் காரணமாக, கச்சா எண்ணெய், சமையல் கேஸ் ஏற்றி வந்த கப்பல்களின் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. இதனால், சமையல் கேஸ் சிலிண்டர் வினியோகத்தில் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. புதிய கேஸ் இணைப்பு வழங்குவது நிறுத்தப்பட்டது.

கப்பல் போக்குவரத்து இயல்பு நிலைக்கு திரும்பியதும், ஜூலையில் இருந்து கேஸ் வினியோக கட்டுப்பாடுகளை, மத்திய அரசு விலக்கிக் கொண்டது. அதேசமயம், 8 மாதங்களாகியும், இன்னும் புதிய கேஸ் இணைப்பு வழங்கும் பணி தொடங்கவில்லை.

இதனால், புதிய இணைப்பு கேட்டு ஏஜென்சிகளுக்கு செல்லும் பலரும், ஏமாற்றத்துடன் திரும்பி செல்கின்றனர். புதிய கேஸ் இணைப்பு வழங்குவதற்கான பணிகளை மத்திய, மாநில அரசுகள் மேற்கொள்ள வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தொடர்ந்து உயரும் தங்கம் விலை!



சென்னை, நவ. 27–

தங்கம் விலை கிராமுக்கு ரூ.60 உயர்ந்து, ரூ.11,600 –க்கும் பவுனுக்கு ரூ.480 உயர்ந்து, ரூ.92,800–க்கு விற்பனையாகி றது. அதுபோன்று 18 காரட் தங்கம் விலை கிராமுக்கு ரூ.55 உயர்ந்து, ரூ.9,495–க்கும், சவரனுக்கு ரூ.440 உயர்ந்து, ரூ.75,960–க்கு விற்பனையாகிறது.

வெள்ளி விலையும் இன்று உயர்ந்துள்ளது.

அதன்படி, கிராமுக்கு ரூ.5 உயர்ந்து, ரூ.170–க்கும், ஒரு கிலோ கட்டி வெள்ளி ரூ.5,000 உயர்ந்து ரூ.1,70,000–க்கும் விற்பனையாகிறது.

பறவைகள் உயிரிழப்பு: கிண்டி பூங்கா மூடல்!



சென்னை, நவ. 27–

சென்னை கிண்டி சிறுவர் பூங்கா, பறவைகள் உயிரிழந்ததைத் தொடர்ந்து நவம்பர் 28 முதல் 30–ம் தேதி வரை அல்லது மறுஉத்தரவு வரும் வரை மூடப்படுகிறது.



தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.வ.சிவகிருஷ்ணமூர்த்தி, தலைமையில், 5–ஆவது புத்தகத் திருவிழா – 2026 கொண்டாடுவது தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்பாடு பணிகள் குறித்து சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. உடன் மாவட்ட வருவாய் அலுவலர் ரா.ரம்யாதேவி உட்பட பலர் உள்ளனர்.



இந்திய அரசியலமைப்பு உறுதிமொழி க.பரமத்தி ஊராட்சி ஒன்றியத்தில் பிடிஒ நீலகண்டன் தலைமையில் பணியாளர்கள் வாசித்தனர்.



திராவிட முன்னேற்றக் கழகத்தின் கழக இளைஞரணி செயலாளரும் மாண்புமிகு தமிழ்நாடு எதிர்க்கட்சி தலைவருமான திரு உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஐம்பதாவது பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு திருப்பூர் வடக்கு மாவட்டம் வடக்கு மாநகரம் 15–வேலம்பாளையம் பகுதி கழகத்திற்கு உட்பட்ட–1–வது வார்டில் வார்டு செயலாளர் மகேந்திரன் ஏற்பாட்டில் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி அன்னதானம் வழங்கும் விழா வெகு சிறப்பாக நடைபெற்றது இந்த விழாவினை பகுதி கழகச் செயலாளர் கொ. ராமதாஸ் துவக்கி வைத்தார் இந்த நிகழ்வில் மாவட்ட மாநகர பகுதி வட்டக் கழக நிர்வாகிகள் மகளிர் அணியினர் சார்பு அணியினர் நூற்றுக்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்...



திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞரணி செயலா ளரும் மாண்புமிகு தமிழக எதிர் கட்சி தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 50–வது பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு திருப்பூர் வடக்கு மாவட்டம் வடக்கு மாநகரம் கொங்கு நகர் பகுதி கழகத்திற்கு உட்பட்ட 32 வது வார்டு செயலாளரும் திருப்பூர் மாநகராட்சி 2வது மண்டல தலைவருமான தம்பி ஆர் கோவிந்தராஜ் தலைமையில் என் ஆர் கே புரம்.1 ரயில்வே கேட், கருணாகர பூரி ஆகிய மூன்று இடங்களில் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது இதில் கழக நிர்வாகிகள் முத்துசாமி, கார்த்திக், குமரேசன்,குப்புசாமி, சம்பத்,பழனிசாமி, சக்திவேல், பாபு,சிவ சக்திவேல்,தனபால்,அண்ணாதுரை,ஏழுமலை, சுதா,சகிலா,சபரி, ஹேமா,பங்கேற்றனர்.

பாசனத்துக்கு தண்ணீர் திறப்பு!



பழனி நவ 27–

பழனி அருகே உள்ள பாலாறு பொருந்தலாறு அணையில் இருந்து தாடாகுளம் ஆயக்குடி பாசனத்திற்காக இன்று முதல் 120 நாட்களுக்கு தண்ணீர் திறக்கப்படுகிறது. வினாடிக்கு 9 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்படுவதன் மூலம் , பாலசமுத்திரம் கிராமங்களில் உள்ள 844 ஏக்கர் விவசாய நிலங்கள் பயன்பெற உள்ளன. 2027 மார்ச் 26–ந்தேதி வரை தண்ணீர் திறக்கப்பட உள்ளது.

Printed by **Dr.P.Pandiarajan,** Printed at Raja Printers at No.182, Vakkil New Street, Simmakkal, Madurai –625 001. Published by **Dr.P.Pandiarajan,** No.182, Vakkil New Street, Simmakkal, Madurai –625 001. Editor. **Dr. P. Pandiarajan.** TN/WPP–143/SR/2018–2020